# ලංකාණ්ඩුවේ ගැසට් පත්‍රය

## අති විශෙෂ

# இலங்கை அரசாங்க வர்த்தமானப் பத்திரிகை

## அதி விசேஷமானது

අංක 14,937/7 — 1970 දෙසැම්බර් 24 වැනි බ්‍රහස්පතින්ද — 1970.12.24

14,937/7 ம் இலக்கம்—1970 ம் ஆண்டு திசெம்பர் மாதம் 24 ந் திகதி வியாழக்கிழமை

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)


## பகுதி IV — உள்ளூராட்சி

### உள்ளூராட்சி அறிவித்தல்கள்

எல். டி.—பி. 51/39.

எல். ஜி. டி/எச்பி 8/1/13.

**கிராமச் சபைகள் கட்டளைச் சட்டம்**

54 ஆம் பிரிவின் கீழான கட்டளை

(257 ஆம் அத்தியாயமான) கிராமச் சபைகள் கட்டளைச் சட்டத்தின் 54 ஆம் பிரிவினால் எனக்குரித்தாக்கப்பட்ட தத்துவங்களைக் கொண்டு அரசாங்க நிர்வாக, உள்ளூராட்சி உள்நாட்டலுவல்கள் அமைச்சர் பீலிக்ஸ் றெஜினோல்ட் டயஸ் பண்டாரநாயக்க ஆகிய நான் கொழும்பு மாவட்டத்திலுள்ள ஹன்வெல்ல பேருவக் கிராமப் பிரதேசத்தின் கிராமச் சபையின் தலைவரான திரு. டொன் சுகதன் எதிரிசிங்க என்பவர்பால்—

(அ) திறமையின்மையும் தவறான முகாமையும் ;

(ஆ) கிராமச் சபைகள் கட்டளைச் சட்டத்தினால் சுமத்தப்பட்ட கடமைகளை நிறைவேற்றுதலில் தொடர்ந்து மறுத்தல், அத்துடன் வேண்டுமென்று அசிரத்தை காட்டுதல் ;

(இ) அக்கடமைகளை நிறைவேற்றுவதில் தகாத நடத்தையும் ;

(ஈ) அத்துடன் கிராமச் சபைகள் கட்டளைச் சட்டத்தினால் வழங்கப்பட்ட அதிகாரங்களைத் துஷ்பிரயோகஞ் செய்தமையும்,

உள்ளன என்பதற்குப் போதிய சான்று உண்டு என்று திருத்திப்பட்டுள்ளேனாதலால் சொல்லப்பட்ட திரு. டொன் சுகதன் எதிரிசிங்க என்பவரை மேற்சொல்லப்பட்ட கிராமச் சபையின் தலைவர் பதவியில் இருந்து இக்கட்டளை மூலம் நீக்குகிறேன்.

**ඩී. ආර්. ඩී. බණ්ඩාරනායක,**
அரசாங்க நிர்வாக, உள்ளூராட்சி, உள்நாட்டலுவல்கள் அமைச்சர்.

கொழும்பு,
1970 ம் ஆண்டு டிசெம்பர் மீ 24 ந் உ.

**12—1119.**